# பட்டயம்

மலர் - 07 டிசம்பர் - 2010 இதழ் - 2

Date of Issue : 01-12-2010

Place of Publication : 86 / 222H, Main Road, Panagudi - 627 109. Tirunelveli District, Tamil Nadu.

Volume : 7

Issue : 2 Price Per Copy : Rs.5.00



LET MY HEART THROB & SWELL WITH JOY (IS 60/5)

என் இதயம் அதிசயப்பட்டுப் பூரிப்பதாக

(ஏசாயா 60/5)

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.in

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)





C²V ¡±vÕUv

Utßm

×jRôió

SpYôrjÕdLs!!!





**264. கர்த்தருக்கு முன்பாக பாவிகள் நிற்க முடியுமா?**

1. கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய கர்த்தர். அவர் யுத்தம் பண்ணுவாரானால் மனுஷனால் எதுவும் சாதிக்க முடியாது. - யாத் 14/13,14
2. அவர் கோபத்திற்கு முன் ஒருவனும் நிற்க முடியாது - சங் 76/7
3. அவர் குளிருக்கு முன் ஒன்றும் நிற்க முடியாது - சங் 147/17
4. அவர் அக்கினிக்கு முன் ஒன்றும் நிற்க முடியாது - II இரா 1/10,12
5. அவர் வல்லமைக்கு முன் மற்ற வல்லமைகள் நிற்க முடியாது - யோபு 26/14
6. அவர் ஆவிக்கு முன் அசுத்த ஆவிகள் நிற்க முடியாது - மத் 12/28
7. அவர் புயத்திற்கு முன் மனுஷகரங்கள் நிற்க முடியாது - சங் 89/10
8. அவர் அதிகாரங்களுக்கு முன் உலக அதிகாரங்கள் நிற்க முடியாது - யோபு 25/2
9. அவர் வார்த்தைகளுக்கு முன் மந்திர வார்த்தைகள் நிற்க முடியாது. - எபி 4/12
10. அவருடைய மகிமைக்கு முன் மனுஷ மகிமைகள் நிற்க முடியாது - ஏசாயா 40/6,7
11. அவர் ஞானத்திற்கு முன் மனுஷ ஞானம் நிற்க முடியாது - பிரசங்கி 9/14-16
12. அவருடைய இராஜ்யத்திற்கு முன் பாவராஜ்யங்கள் நிற்க முடியாது - தானி 2/38-44
13. அவர் வாயின் சுவாசத்திற்கு முன் அந்திகிறிஸ்து நிற்க முடியாது - II தெச 2/8
14. அவர் வல்லமைக்கு முன்பாக அசுத்த ஆவிகள் நிற்க முடியாது - மாற்கு 5/6,7
15. அவருடைய இரத்த வல்லமைக்கு முன்பாக விஷவல்லமைகள் நிற்க முடியாது - மாற்கு 16/18
16. அவருடைய பலத்துக்கு முன்பாக வேறு எந்த பலமும் நிற்க முடியாது - சங் 24/8

17. அவருடைய சித்தத்திற்கு முன்பாக சாத்தான் சித்தம் நிற்க முடியாது - யோபு 42/2

18. அவருடைய சித்தத்திற்கு முன் மனுஷனுடைய சித்தம் நிற்க முடியாது - ஆதி 11/3-10

19. அவருக்கு முன்பாக கடல் சீற முடியாது - யோபு 38/10,11

20. அவருக்கு முன்பாக சிங்கம் வாயைத் திறக்க முடியாது - தானி 6/32

21. அவருக்கு முன்பாக அக்கினி பட்சிக்க முடியாது - தானி 3/27

22. அவருக்கு முன்பாக எந்த மந்திரவாதியும் நிற்க முடியாது - அப் 13/8-11

23. அவருக்கு முன்பாக பெருங்காற்று, பெருமழை, கடல் கொந்தளிப்பு நிற்க முடியாது - மாற்கு 4/39

24. அவருக்கு முன்பாக சூரியனும் நிற்க முடியாது - யோசுவா 10/12,13

25. அவருக்கு முன்பாக பொல்லாத ராஜாக்கள் நிற்க முடியாது - I சாமு 17/45,46

26. அவருக்கு முன்பாக எந்த ஆயுதமும் நிற்க முடியாது - ஏசா 54/17

27. அவருக்கு முன்பாக எந்த சக்தியும் நிற்க முடியாது - எபி 4/12

28. அவருடைய ஞானத்திற்கு முன் சாத்தானின் ஞானம் நிற்க முடியாது - I கொரி 1/20,27

29. அவருக்கு முன்பாக வானமும் பூமியும் நிற்க முடியாது - வெளி 21/1

30. அவருக்கு முன்பாக நாம் காண்கின்ற கடலும் நிற்க முடியாது - வெளி 21/1

31. அவருக்கு முன்பாக பாவநகரங்கள் நிற்க முடியாது - எரே 50/46

32. அவருக்கு முன்பாக கள்ள தீர்க்கதரிசிகள் நிற்க முடியாது -அப் 13/6

33. அவருக்கு முன்பாக கள்ளப் போதகர்கள் நிற்க முடியாது - வெளி 2/2

34. அவருக்கு முன்பாக கள்ள அப்போஸ்தலர்கள் நிற்க முடியாது - வெளி 2/2,3

35. அவருக்கு முன்பாக கள்ள கிறிஸ்துக்கள் நிற்க முடியாது - மத் 24/24

36. அவருக்கு முன்பாக கள்ள சகோதரர்கள் நிற்க முடியாது - II கொரி 11/26

37. அவருக்கு முன் அந்தி கிறிஸ்துக்கள் நிற்க முடியாது - I யோ 4/4

38. அவருக்கு முன்பாக அந்தகாரலோகாதிபதிகள் நிற்க முடியாது - எபே 6/12

39. அவருக்கு முன்பாக வான மண்டலப் பொல்லா ஆவிகள் நிற்க முடியாது - எபே 6/12

40. அவருடைய தூதர்களுக்கு முன்பாக சாத்தானின் தூதர்கள் நிற்க முடியாது - வெளி 12/7

41. அவருக்கு முன்பாக மனுஷனுடைய பயமுறுத்தல் நிற்க முடியாது - ஆதி 35/5

42. அவருக்கு முன்பாக சாத்தான் நிற்க முடியாது (லிவியாதான்) - ஏசாயா 27/1

**265. கர்த்தர் யுத்தத்தில் பராக்கிரமம் உள்ளவரா?**

1. கோராகின் கூட்டத்தார்களை பூமியானது பிளந்து மூடிக்கொண்டது. (எண் 16/33)
2. தாவீது 1 கல்லினால் கோலியாத்தை வீழ்த்தினான் (I சாமு 17/49,50)
3. எகிப்திலே தலைப்பிள்ளைச் சங்காரமுண்டாக்கினார். (யாத் 12/29)
4. பார்வோனை, அவன் சேனைகளை அவன் இரதங்களை சமுத்திரத்தில் தள்ளினார். (யாத். 14/27,28)
5. செங்கடலைப் பிளக்கப் பண்ணினார் (யாத் 14/21-23)
6. சாத்தானின் தலையை நசுக்க வல்லவர் இயேசு. (ஆதி. 3/15)
7. கொடிய பாவிகளை இருப்புக்கோலால் நொறுக்க வல்லவர் இயேசு (சங் 2/9)
8. நமக்காக யுத்தம் பண்ண வல்லவர் இயேசு. (யாத் 14/14)
9. பலத்த இராணுவத்திற்கும் கண் மயக்கம் கொடுக்க வல்லவர் இயேசு. (2இராஜா 6/16-18)

10. பெரிய இராணுவத்தையும் பயமுறுத்த வல்லவர் இயேசு (II இராஜா 7/6,7)

11. பாவராஜ்யங்களை விழப்பண்ண வல்லவர் இயேசு. (தானி 2/37-44)

12. பலத்த இராஜாக்களை விழப்பண்ண வல்லவர் இயேசு. (I நாளா 11/21-23)

13. அறிவைக் குழப்ப வல்லவர் இயேசு. (தானி 5/20,21)

14. சிங்கங்களின் வாய்களை அடைக்க வல்லவர் இயேசு. (தானி 6/22)

15. அக்கினி சேதப்படுத்தாதபடி காக்க வல்லவர் இயேசு. (தானி 3/27)

16. மந்திரவாதிகளின் கண்களை குருடாக்க வல்லவர் இயேசு. (அப் 13/11)

17. புழுபுழுத்து சாகப்பண்ண வல்லவர் இயேசு. (அப் 12/23)

18. எரிகோ கோட்டைகளை உடைக்க வல்லவர் இயேசு. (யோசுவா 6/20)

19. ஆமான்களை தாழ்த்த வல்லவர் இயேசு. (எஸ்தர் 6/13;7/10)

20. ஜலப்பிரளயத்தை வரப்பண்ண வல்லவர் இயேசு. (ஆதி 7/17-22)

21. பாவ நகரங்களைக் கவிழ்க்க வல்லவர் இயேசு. (வெளி 18/2)

22. பாவிகளையும் பிசாசையும் நரகத்தில் தள்ள வல்லவர் இயேசு. (சங் 49/14 மத் 25/41)

23. அந்திகிறிஸ்துவை, கள்ள தீர்க்கதரிசியை ஜெயிக்க வல்லவர் இயேசு. (வெளி 19/19,20)

24. முற்றிலும் அழிக்க வல்லவர் இயேசு (யூதா 10)

**266. கர்த்தருடைய கரம் என்ன செய்ய முடியும்?**

1. கர்த்தரின் கரம் செங்கடல்களைப் பிளக்க முடியும். செங்கடல் போன்ற பிரச்சனைகளில் பாதையைப் பிறப்பிக்க முடியும். (யாத் 14/21)

2. செங்கடல் போன்ற சாத்தானின் கிரியைகளைப் பிளந்து போட முடியும் (யாத் 14/21)

3. கர்த்தரின் கரம் செங்கடல் போன்ற ராகாபின் ஆவியை, சமுத்திர வலுசர்ப்ப ஆவியைப், பிளக்க முடியும். (ஏசாயா 27/1)

4. கர்த்தரின் கரம் மரணக்கட்டுகளை அழிக்க முடியும் (மத் 9/20) ( I இரா 17/21)

5. கர்த்தரின் சரம் குஷ்டரோகத்தைக் குணமாக்க முடியும் (மத் 8/3)

6. கர்த்தரின் கரம் சப்பாணியைக் குணமாக்க முடியும். (அப் 3/7)

7. கர்த்தரின் கரம் காய்ச்சலைத் துரத்த முடியும். (மத் 8/15)

8. கர்த்தரின் கரம் குருடரின் கண்களைத் திறக்க முடியும். (மத் 9/29)

9. கர்த்தருடைய கரம் பயத்தைப் போக்க முடியும். (மத் 17/7)

10. கர்த்தரின் கரம் நாவின் கட்டுகளை, காதுகளின் கட்டுகளை அவிழ்க்க முடியும். (மாற் 7/35)

11. சிறுபிள்ளைகளை கர்த்தரின் கரம் ஆசீர்வதிக்க முடியும். (மாற் 10/13)

12. கர்த்தரின் கரம் காயத்தைக் குணமாக்க முடியும். (லூக். 22/51)

13. கர்த்தருடைய கரம் அவருடைய ஊழியத்திற்காக வேறு பிரிக்க முடியும். (அப் 13/3)

14. கர்த்தருடைய கரம் வரங்களை அருள முடியும். (2தீமோ 1/6)

15. கர்த்தருடைய கரம் பரிசுத்த ஆவியை அருள முடியும். (அப் 8/18)

16. கர்த்தருடைய கரம் மந்திரவாதிகளை அடிக்க முடியும். (அப் 13/11)

17. கர்த்தருடைய கரம் அவர் ஊழியர்களோடிருந்து கைகளை வைத்து ஜெபிக்கையில் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முடியும் (ஏசாயா 66/14)

**267. சரீர சுகத்தைப் பெற என்ன செய்ய வேண்டும்?**

1. நம்மை உண்டாக்கியவர் கர்த்தர். மருந்துகளைப் படைத்தவர் கர்த்தர். எனவே நாம் வியாதிப்படும் போது கர்த்தரே நம் சரீரத்தைத் தொடும்படி ஜெபிக்க வேண்டும். கர்த்தரே நாம் எடுக்கின்ற மருந்துகளைத் தொடும்படியும் ஜெபிக்க வேண்டும். பரம மருத்துவரிடம் நம்மையும் நாம் எடுக்கிற மருந்துகளையும் கொடுக்க வேண்டும். அவர் தொடும் போது சீக்கிரமாய் சுகமுண்டு. (மத் 8/3)

2. ஒவ்வொரு நாளும் நம் சரீரத்தைத் தொடும்படி அவரிடத்தில் நம்மைக் கொடுக்க வேண்டும். (ரோமர் 12/1)

3. இன்னும் இன்னும் இயேசுவை நெருங்க வேண்டும். அப்பொழுது தீராத வியாதிகளும் தீரும். (மத் 4/23,24)

4. நம் ஆத்துமா வாழ வேண்டும். அப்போது சரீரப்பிரகாரமாகவும் கர்த்தர் சௌக்கியம் தருவார். (III யோவான் 2)

5. வியாதியஸ்தர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். அப்போது கர்த்தர் நம் வியாதிகளையும் நீக்குவார். (யாக் 5/16)

**268. துன்பங்கள் எப்படி எல்லாம் வரலாம்?**

1. நாம் தேவனுடைய வழிகளுக்கு மாறிச் செல்லும் போது தேவனே நம்மைச் சிட்சிப்பார், தண்டிப்பார். இதனால் சில துன்பங்கள் நம் வாழ்வில் வரலாம். இத்துன்பங்கள் மாற வேண்டுமானால் நாம் அவ்வழிகளை விட்டு மாற வேண்டும். நாம் தவறு செய்த மனிதனோடும் தேவனோடும் ஒப்புரவாக வேண்டும். தேவனுடைய கரங்களில் விழ வேண்டும். அப்பொழுது காயப்படுத்தின கர்த்தரின் கரங்கள் நம் காயங்களைக் கட்டும்; தேற்றும்; ஆற்றும்; அரவணைக்கும். (யோபு 5/17,18)

2. இந்த பொல்லாத உலகில் சாத்தானால் துன்பங்கள் வரலாம். ஆனால் மனந்திரும்பிய தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவனுடைய அனுமதி இல்லாமல் சாத்தானின் சோதனைகள் வர முடியாது.

    உதாரணமாக யோபுவையும் பேதுருவையும் பார்க்கலாம். (யோபு 2/5-7) (லூக்கா 22/31,32). சாத்தான் சோதனையில் சாத்தானையும் ஜெயிக்க உதவும் கர்த்தர் நம்மோடிருந்து வெற்றியருள்வார்.

3. இந்த பாவ உலகில் கொடிய பாவிகளால் நமக்குத் துன்பங்கள் வரலாம். ஆனாலும் திறவுகோல் அதிகாரங்களால் ஜெபிக்கும் போது அவர்களைக் கட்டிப் போட முடியும். யாக்கோபின் தேவன் நம்மை லாபான்கள், ஏசாக்கள் கைகளுக்குத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் ஆனால் யாக்கோபைப் போல் ஜெபிக்கிற, அண்டிக்கொள்ளுகிற இஸ்ரவேலர்களாயிருக்க வேண்டும். (ஆதி 33/4)

**269. எப்படிப்பட்ட ஐக்கியங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது?**

1. உலக சிநேக ஜனங்களுக்கு ஒத்த வேஷம் போடாதே. (ரோமர் 12/2)
2. உலக ஜனங்களைப் போல் கண்களின் இச்சை, மாம்ச இச்சை போன்ற ஐக்கியங்களில் சிக்கக் கூடாது. (I யோ 2/15,16)
3. ஜீவனப் பெருமைக்கு இடம் கொடுக்கின்ற ஐக்கியங்களில் சிக்கக் கூடாது. (I யோ 2/16,17)
4. துன்மார்க்கரின் ஆலோசனைகளுக்கு இடம் கொடாதே (சங் 1/1)
5. பாவிகளின் வழியில் நில்லாதே (சங் 1/1)
6. தேவனைப் பரியாசம் பண்ணும் ஜனங்களோடு உட்காராதே (சங் 1/1)
7. மனிதனை அவமதிக்கும் ஜனங்களோடு ஐக்கியம் கொள்ளாதே (சங் 1/1)
8. அவிசுவாசிகளைத் திருமணம் செய்யக் கூடாது (II கொரி 6/14,15)
9. பிசாசை ஆராதிக்கக் கூடாது. (II கொரி 6/16)
10. சாத்தானுக்குப் படைத்தவைகளைப் புசிக்கக் கூடாது (II கொரி 6/16,17)
11. பிசாசோடு ஐக்கியம் கொள்ளக் கூடாது. (II கொரி 6/16,17)
12. குறிகேட்கக் கூடாது. (உபா 18/10,11)
13. ஜோஸ்யம் பார்க்கக் கூடாது. (உபா 18/10,11)
14. மந்திரவாதம் செய்யக் கூடாது. (உபா 18/10,11)
15. பில்சூனியம் செய்யக் கூடாது. (உபா 18/10,11)
16. மாயவித்தை செய்யக் கூடாது. (உபா 18/10,11)
17. அஞ்சனம் பார்க்கக் கூடாது. (உபா 18/10,11)
18. செத்தவர்களிடம் குறி கேட்கக் கூடாது. (உபா 18/10,11)
19. போஜனப்பிரியர்களோடு ஐக்கியம் கொள்ளக் கூடாது. (நீதி 23/2)
20. மாமிசப் பெருந்தீனிக்காரர்களோடு ஐக்கியம் கொள்ளக் கூடாது. (நீதி 23/20)

21. மதுபானப் பிரியார்களோடே ஐக்கியம் கொள்ளக் கூடாது. (நீதி 23/20)

22. கர்த்தரை வெறுப்பவர்களோடு ஐக்கியம் கொள்ளக்கூடாது. (சங் 139/21,22)

23. உலக சிநேகத்தில் உள்ளவர்களை நண்பர்களாக வைத்துக் கொள்ள கூடாது (1 கொரி 5/11)

**270. சாத்தானோடே கர்த்தர் எப்படி யுத்தம் பண்ணுவார்?**

1. சாத்தான் அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜா. இவனை கர்த்தரே ஜெயிக்க முடியும். (யோபு 41/34)

2. கர்த்தர் ஓங்கிய புயத்தில் தம் பலத்த பட்டயத்தைக் கொண்டு இவனைத் தண்டிப்பார். (ஏசா 51/9)

3. கர்த்தரே அக்கினிமயமானவராய் கடந்து வந்து இவனை உள்ளும் புறம்புமாய் சுட்டெரிக்க முடியும். (ஏசாயா 10/17,18)

4. அவருடைய அக்கினிமயமான கண்கள், உலைக்களத்தில் காய்ந்த வெண்கலம் போன்ற பாதங்கள், கைகளில் உள்ள 7 நட்சத்திர வல்லமைகள், அக்கினி வார்த்தை, அக்கினி சுவாசம், இடிமுழக்க சத்தம், 7 ஆவியின் 7 அக்கினிகள், அக்கினி சிங்காசன வல்லமை, அக்கினி நதி, பலிபீட அக்கினி, கேருபீன்கள் மத்தியில் உள்ள அக்கினி, சுட்டெரிப்பின் ஆவி யாவையும் கொண்டு சுட்டெரிப்பார். (வெளி 1/14,15)

5. கர்த்தர் வானங்களைக் கிழித்திறங்கி பர்வதங்களைச் சுட்டெரிக்க முடியும் (ஏசாயா 64/2)

6. பெரிய பர்வதத்தை அவர் தலைக்கல்லாய் கடந்து வந்து சமபூமியாக்கிப் போட முடியும். (சகரியா 4/7)

7. கர்த்தர் அதை உருட்டி எரிந்து போன பர்வதமாக்க முடியும். (ஏசா 51/25)

8. அக்கினியால் உள்ளும் புறம்புமாய் எரிக்க முடியும் (ஏசா 10/18)

9. கற்பாறையில் அக்கினியை எழுப்பின ஆண்டவர் அதனுள்ளாய் அக்கினியை எழுப்பி அதனை உள்ளாய் சுட்டெரிக்க முடியும். (நியா 13/20)

10. கர்த்தர் அதைச் சபிக்க முடியும். (மத் 21/19)

11. கர்த்தரே அதைக் கட்டிப்போட முடியும் (மத் 18/18)

**271. ஒரு தேவனுடைய பிள்ளையின் மரணத்துக்குப் பின் சம்பவிப்பது என்ன?**

1. அவருடைய சரீரம் மண்ணோடு மண்ணாகும். (பிரசங்கி 12/7)

2. அவருடைய ஆவி (மனுஷ ஆவி) ஆண்டவரிடம் திரும்பும். (பிரசங்கி 12/7)

3. அவர் ஆத்துமா ஒரு ரூபத்தை (அந்த நபரைப் போன்ற) அடையும். (சங் 49/14)

4. அந்த ஆத்துமா தேவதூதர்களால் பரதீஸுக்குள் போகும். இந்த பரதீஸ் மூன்றாம் வானத்தில் உள்ளது. (லூக் 16/22)

5. ஆண்டவர் நித்தியமான வீடுகளை பரதீஸில் அவர் பிள்ளைகளுக்காகக் கட்டிக் கொண்டு இருக்கிறார். அவரவர் வீடுகளில் அவரவர் இருப்பார்கள். மரித்த பரிசுத்தவான்களின் ஆத்மாக்கள் இந்த ஆத்துமாவை வரவேற்கும். (லூக் 16/9)

6. இந்தப் பரதீஸில் ஆண்டவர் பிரசன்னம் இருக்கும். (பி□1/23)

7. இந்தப் பரதீஸில் இளைப்பாறுதல் உண்டு. (ஏசாயா 57/2)

8. இந்தப் பரதீஸில் வாக்குக்கடங்காத வார்த்தைகளால் மரித்த பரிசுத்தவான்கள் இயேசுவைப் புகழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். (II கொரி 12/3)

9. கர்த்தருடைய வருகையில் இந்த ஆத்துமாக்கள் மகிமையான ஒரு சரீரத்தைப் பெற்றுக் கொள்ளும் (I கொரி 15/43)

10. யுகயுகமாய் முகமுகமாய் கர்த்தரைக் காண்போம். (I யோ 3/2)

**272. பரலோகில் நாம் அவர் வருகைக்குப் பின் எப்படி இருப்போம்?**

1. ஆண்டவரை மகிமையின் சரீரத்தில் சிங்காசனத்தில் காணமுடியும். அவர் சரீரத்தைத் தொட்டால் தெரியும். அது நித்திய சரீரம். (மாற்கு 16/19)

2. நமக்கும் நித்திய மகிமை, நித்திய சரீரம், நித்திய ஜீவன், நித்திய வீடு யாவும் தருவார். (I கொரி 15/42,43)

3. மகிமையின் அளவிலே அவனவன் கிரியைகளுக்கேற்றபடி பலனளிப்பார். (I கொரி 15/40,41)

4. அவருடைய தூதர்கள் காற்றுகளாயிருப்பதால் அவைகளுக்கு மகிமையின் சரீரம் போன்ற சரீரம் இருக்காது. (எபி 1/ 7)

5. நம்முடைய மகிமையின் சரீரத்திலே அவருடைய தூதர்களையும் நாம் காண முடியும். (மத் 18/10)

6. பரலோகில் திருமணம் இல்லை. சந்ததி பெருகாது. (மத் 18/3)

7. பரலோகில் கடவுளைக் காண முடியாது. ஏனென்றால் அவர் ஆவியாய் எங்கும் நிறைந்தவராய் இருக்கின்றார். (யோ 4/24)

8. பரலோகில் மறைவான மன்னா, ஜீவவிருட்சக்கனிகள், ஜீவத் தண்ணீர் புசிப்போம். (வெளி 2 / 17,7 ; 22 / 17 )

**273. தேசத்தில் எப்பொழுது ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாகும்?**

1. தேசத்தில் இலச்சையான புணர்ச்சி தடை செய்யப்பட வேண்டும். (ரோமர் 1/24-27)

2. தேசத்தில் உள்ள விக்கிரக ஆவிகள், சொரூப ஆவிகள் சுட்டெரிக்கப்பட வேண்டும். (1 ராஜா 15/12)

3. வான மண்டலப் பொல்லாத ஆவிகளைக் கட்டி ஜெபிக்க வேண்டும் (2 ராஜா 23/4)

4. தேசத்தில் உள்ள கள்ள தீர்க்கதரிசிகள், கள்ள போதகர்கள், கள்ள கிறிஸ்துக்கள், அந்திகிறிஸ்துக்கள், கள்ள சகோதரர்கள் யாவரையும் கட்டி ஜெபிக்க வேண்டும். (மத் 24/4,5,11)

5. தேசத்தில் உள்ள அந்தகாரலோகாதிபதிகளைக் கட்டி ஜெபிக்க வேண்டும். (எபே 6/12)

6. தேசத்தில் உள்ள மதவாதம், மந்திரவாதம், தீவிரவாதம், பயங்கரவாதம் யாவும் மாறிட ஜெபிக்க வேண்டும். (மத் 24/12)

7. தேசத்துக்கு விரோதமான தீமைகளைக் கட்டி ஜெபித்து மேற்கொள்ள வேண்டும். (யோவேல் 2/21)

8. எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் தேசத்தில் பொழியப்படும்படி ஜெபிக்க வேண்டும். (பி4/7)

9. கர்த்தரின் அக்கினி தேசத்தில் எல்லா பாகங்களிலும் இறங்கும்படி ஜெபிக்க வேண்டும். (சகரியா 10/1)

10. கர்த்தரின் இரத்த வல்லமை எல்லா இடங்களிலும் இறங்கி தீமைகளைத் தகர்க்கும்படி ஜெபிக்க வேண்டும். (எபி 12/24)

11. தேசத்தில் எங்கும் சுவிசேஷ வாசல்கள் திறக்கும்படி ஜெபிக்க வேண்டும். (ஏசாயா 45/4)

12. தேசத்தில் கர்த்தரின் வசனம் எங்கும் விதைக்கப்பட வாசல்கள் திறந்திட ஜெபிக்க வேண்டும். (மத் 24/14)

13. ஜனங்களின் மனக்கண்கள் திறக்கப்பட ஜெபிக்க வேண்டும். (II கொரி 4/4)

14. ஜனங்கள் மனந்திரும்பிட ஜெபிக்க வேண்டும். (மத் 3/2)

15. தேவ ஆவியைப் பெற்ற ஊழியர்கள் ஒருமித்து செயல்பட ஜெபிக்க வேண்டும். (II கொரி 13/14)

16. தவறான உபதேசங்களைக் கட்டி ஜெபிக்க வேண்டும். (கலா 1/8)

17. சத்தியம் சரியாகப் போதிக்கப்பட ஜெபிக்க வேண்டும். (யோ 8/32)

18. பரிசுத்த பர்வதம் எழும்பிட ஜெபிக்க வேண்டும். (சகரியா 8/3)

19. பரிசுத்த பர்வத மகிமை ஆலயம் எழும்பிட ஜெபிக்க வேண்டும். (ஏசா 2/2)

**279. கர்த்தர் அக்கினி மயமானவரா?**

1. கர்த்தர் அக்கினிமயமானவரானபடியினால் மோசே கண்ட காட்சியில் முட்செடியில் அக்கினி சுவாலையில் நின்றார். (யாத்3/2)

2. அவர் அக்கினிமயமானவரானபடியால் சீனாய் மலையின் மேல் அக்கினியில் இறங்கினார். (யாத் 19/18)

3. அவர் அக்கினிமயமானவரானபடியால் மனோவா முன்பாக பலிபீட ஜுவாலையிலே ஏறிப்போனார். (நியாயா 13/20)

4. அவர் அக்கினிமயமானவர் என்று ஏசாயா 10/17 லும் ஏசாயா 64/2 லும் எழுதப்பட்டுள்ளது.

5. தானியேல் புத்தகத்தில் அக்கினி மத்தியில் உலாவுபவராய் வெளிப்படுகின்றார். (தானி 7/9,10)

6. எசேக்கியேல் கண்ட தரிசனத்தில் அக்கினிமயமானவராய் வெளிப்பட்டார். (எசேக்கியேல் 1/27)

7. அக்கினிமயமான சிங்காசனத்தில் அமர்ந்துள்ள நீண்ட ஆயுசுள்ளவராய் தானியேல் 7/9 சொல்கின்றது.

8. அக்கினிமயமான கண்கள் உடையவராய், கைகளில் 7 நட்சத்திரம் உடையவராய், உலைக்களத்தில் காய்ந்த வெண்கலம் போன்ற பாதமுடையவராய், பிரகாசிக்கிற சூரியனைப் போன்ற முகமுடையவராய் யோவான் காண்கின்றான். (வெளி 1/14-16)

9. ஆண்டவரும் அக்கினியைப் போட வந்தேன் என்கின்றார்.

எனவே அக்கினிமயமானவர் சாத்தானையும் அவனுடைய சகல தீமையான கிரியைகளையும் சுட்டெரிக்க முடியும் என்பதை விசுவாசிக்க வேண்டும்.

கர்த்தாவே! அக்கினிமயமானவராய் இறங்கி அந்தகார கிரியைகளை சுட்டெரித்துப் போடும். ஆமென்.

**280. எழுப்புதல் வந்தால் எப்படி கண்டுபிடிக்க முடியும்?**

1. உபவாசித்து ஜெபிப்பார்கள். (மத் 9/14)
2. கர்த்தரை நோக்கி மனம் திரும்புவார்கள். (மத் 3/2)
3. பாவ அறிக்கை செய்வார்கள். (Iயோ 1/9)
4. பெஷ்தர் கைக்குத் தப்பும்படி கர்த்தரை அண்டிக் கொள்வார்கள். (யோ 10/10)
5. கர்த்தரின் அக்கினி வல்லமை வெளியரங்கமாகும். (1ராஜா 18)
6. ஜனங்கள் இராப்போஜனப்பந்திக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். (2 நாளா 30)
7. ஜனங்கள் கர்த்தருக்கடுத்த காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள் (தேவராஜ்ய கனி)

   (உம்.) ஆராதனைகள், ஆலயம் கட்டுதல், சத்தியம் அறிவித்தல், சுவிசேஷம் அறிவித்தல்

8. ஜனங்கள் ஜெபம், உபவாசம் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். (சகரியா 12/10)

9. கர்த்தரைக் குறித்து அநேகர் சாட்சி சொல்வார்கள். (அப் 2/32)

10. கர்த்தரை அநேகர் உயர்த்துவார்கள். (ஏசாயா 2/2)

11. ஜனங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தரை வைப்பார்கள். (ஏசா 2/3)

12. கர்த்தருக்கே முதடும் கொடுப்பார்கள். (மத் 6/33)

13. தனிஜெபம், நண்பர் ஜெபம், சபை ஜெபம், குடும்ப ஜெபம், சபைகள் கூடி ஜெபம் போன்றவை வளரும். (சகரியா 12/10)

14. அநேக இடங்களில் ஜனங்கள் தேவனை ஆராதிப்பார்கள். (யோ 4/21)

15. ஜனங்கள் கர்த்தர் மேல் உள்ள பக்தியில் வளர்வார்கள். ( Iகொரி 14/3)

16. துதிகள் முளைக்கும் (ஏசாயா 61/11)

17. அநேகர் நன்மைகள் செய்வார்கள். சேவைகள் செய்வார்கள். (மத் 5/6)

18. அநேகர் கூட்டம் கூட்டமாக ஞானஸ்நானம் பெறுவார்கள். (லூ 3/12)

19. அநேகர் பரிசுத்த ஆவியைப் பெறுவார்கள். (அப். 2/17,18)

20. அசுத்த ஆவிகள் கூட்டங்களில் சத்தமிட்டு ஓடிப்போகும்.

21. தீராத வியாதிகளைக் கர்த்தர் குணமாக்கி மகிமைப்படுவார். (அப். 19/12)

22. மரித்தவர்களும் எழுப்பப்படுவார்கள். (அப். 9/37-41)

23. தேவாலயம் பழுது பார்க்கப்படும். (நெகே. 3/4)

24. தேவாலயம் எப்போதும் சுத்தமாகக் காணப்படும். (நெகே. 13/9)

25. கள்ளர் குகைகள் பிடிபடும். (மத். 21/13)

26. பின்மாரிக்காக அநேகர் ஜெபிப்பார்கள். (சகரியா. 10/1)

27. ஆதிகால அற்புதங்களைக் காட்டிலும் பெரிய அதிசயங்கள் நடக்கும்.

28. பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் (ஆகாய். 2/9)

## 282. உபவாச ஜெபத்தால் எப்படிப்பட்ட ஆவிகளை மேற் கொள்ளலாம்?

1. ஊமையான ஆவி. (மாற் 9/1)
2. செவிடான ஆவி (மாற் 9/25)
3. அலைக்கழிக்கின்ற ஆவி. (மாற் 9/18)
4. நுரைதள்ள வைக்கும் ஆவி (மாற் 9/18)
5. பல்லைக்கடிக்க வைக்கும் ஆவி (மாற் 9/18)
6. கொல்லும்படி போராடும் ஆவி (மாற் 9/22)
7. தீயில் தள்ளும் ஆவி (மாற் 9/22)
8. தண்ணீரில் தள்ளும் ஆவி (மாற் 9/22)
9. பில்சூனியத்தால் வந்த ஆவி (மாற் 9/29)
10. கொன்னைவாயும், செவிடும் உண்டாக்கும் ஆவி (மாற் 7/25)
11. குருடும் ஊமையும் ஆக்கும் ஆவி (மத் 12/22)

## 283. கர்த்தர் தேவசத்துருக்கள் கைகளுக்கு நம்மை தப்புவிக்க வல்லவரா?

1. பொல்லாதவர்களின் ராஜாக்களை நம் கையில் ஒப்புக்கொடுக்க வல்லமையுள்ள தேவன் (உபா 7/24)
2. ஒருவரும் எதிர்த்து நிற்கவிடாது கர்த்தரால் செய்ய முடியும். (உபா 11/25)
3. தேவன் தம் நாமத்தினிமித்தம், சத்துருக்களுக்குள் நம்மைக் காணும் போது பயமுண்டாக்க முடியும். (உபா 11/25)
4. ஒரு வழியாய் வருபவர்களை 7 வழியாய் கர்த்தரால் துரத்த முடியும். (உபா 28/7)

5. தேவ ஆவியானவரே நம் போராயுதமாயிருந்து அரண்களை நிர்மூலமாக்கலாம். ஆவியானவர் தாமே சத்தியத்துக்கு விரோதமான எண்ணங்களையும் சிறைப்படுத்த முடியும். (2கொரி 10/4)

6. ஆவியானவர் தாமே பொல்லாதவர்களைத் துரத்த முடியும். (சங் 1/4,5)

7. ஆவியானவர் தாமே பணபெலத்தால் யுத்தம் செய்வோர், அரசு பலத்தால் யுத்தம் செய்வோர், அந்தகார வல்லமையால் ஆளுகை செய்வோர், அசுத்த ஆவிகளால் யுத்தம் செய்வோர் யாவரையும் கட்டிப் போட முடியும். (எபே 6/12)

8. ஆவியானவர் தாமே வான மண்டலப் பொல்லா ஆவிகளைக் கட்டிப் போட முடியும். (எபே 6/12)

9. தேவபிள்ளைகளை அடிமைப்படுத்தும்படியும், கொலை செய்யும் படியும் செய்யப்படும் மந்திரவாத சம்பந்த பொருள்களின் பின்னணி ஆவிகளை ஆவியானவர் துரத்திப் போட முடியும். (எசே 13/18)

10. ஏமாற்றி ஜனங்களைக் கொள்ளையடிக்கும் கள்ளத் தீர்க்கதரிசிகளைக் கர்த்தர் துரத்திப் போட முடியும். (எசே 22/25)

## தற்பரிசோதனைக் கேள்விகள்

351. உன் வாழ்வில் கர்த்தரின் சித்தத்தை அறிந்திருக்கிறாயா? (எபே 5/17)

352. எப்பொழுதும் ஆவியினால் நிரம்பி ஜெபிக்கிறாயா? (எபே 5/18)

353. கர்த்தரைப் பாடி மகிமைப்படுத்துகிறாயா? (எபே 5/19)

354. எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்தரிக்கிறாயா?(எபே 5/20)

355. மனைவிகளே, உங்கள் புருஷனுக்கு கீழ்ப்படிகிறீர்களா?(எபே5/22)

356. புருஷர்களே, உங்கள் மனைவியை நேசிக்கிறீர்களா? (எபே 5/24)

357. கர்த்தர் உன்னை கடைசி வரைக்கும் போஷித்துக் காப்பாற்றுவார் என விசுவாசிக்கிறாயா? (எபே 5/29)

358. பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலும் கீழ்படிகிறீர்களா? (எபே 6/1)

359. உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுகிறாயா? (எபே 6/2)

360. கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் உங்கள் பிள்ளைகளை வளர்க்கிறீர்களா? (எபே 6/4)

361. உங்கள் எஜமான்களுக்கு கர்த்தருக்குள் கீழ்படிகிறீர்களா?(எபே6/5)

362. மனப்பூர்வமாய் தேவனுக்கு ஊழியஞ்செய்கிறீர்களா? (எபே 6/6)

363. தேவனுடைய சித்தத்தின்படி ஊழியம் செய்கிறீர்களா? (எபே 6/6)

364. தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்கிறீர்களா? (எபே 6/11)

365. சகல பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபிக்கின்றாயா? (எபே 6/18)

366. சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்கள் தைரியமாக அறிவிக்க அவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா? (எபே 6/19,20)

367. இயேசுவின் வருகைக்கென்று துப்புரவாகவும், இடறலற்றவர் களாகவும் இருக்கின்றாயா? (பி□1/11)

368. எதிர்ப்புகள் வருவதினால் பின்வாங்கிப் போகிறாயா? (பி□1/27)

369. கிறிஸ்துவினிமித்தம் பாடுபட ஒப்புக் கொடுக்கிறாயா? (பி□1/29)

370. மற்றவர்களை மேன்மையானவர்களாக எண்ணுகிறாயா? அல்லது அற்பமாக எண்ணுகிறாயா? (பி□2/3)

371. பிறர் நலனைக் கருதி நற்கிரியை செய்கிறாயா? (பி□2/4)

372. கிறிஸ்து இயேசுவிருந்த சிந்தை உன்னில் உண்டா? (பி□2/5)

373. தாழ்மை உன்னில் உண்டா? (பி□2/8-11)

374. பயத்தோடும், நடுக்கத்தோடும் உன் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுகிறாயா? (பி□2/12)

375. எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்கிறாயா? (பி□2/16)

# புதிய வெப்ஸைட்

I 1. **VISIT OUR NEW WEBSITE**
(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. **WEBSITE ADDRESS IS www.hosannahchurch.in**
(இணையதள முகவரி : **www.hosannahchurch.in)**

3. **FEATURES INSIDE** (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா - ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வாலிபர் பகுதி - ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் - ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் - ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS
(அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

# பெண்கள் எழுப்புதல் ஜெபம்

**'பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது' - மத். 10/7**

**நாள் : 15-1-2011 சனிக்கிழமை**

**நேரம் : காலை 10 முதல் மாலை 4 மணி வரை**

**இடம் : ஓசன்னா ஆலயம், பணகுடி**

**மதியம் உணவு வழங்கப்படும் பெண்கள் அனைவரும் பங்கு பெற்று ஜெப வீரார்களாக மாற உங்களை இயேசுவின் நாமத்தினாலே அன்புடன் அழைக்கிறோம்.**

**úVôúYp ¾odLR¬N] ×vRLj§-ÚkÕ úYR®]ô úTôh¥ SPdÏm.**

இப்படிக்கு,
**ஓசன்னா ஆலயபோதகர்**